ஸ்ரீ :
ஸ்ரீமதே ராமாநுஜாய நம: ஸ்ரீமத் வரவரமுநயே நம:
ஸ்ரீமத் வரத குரவே நம:

## திருவரகங்கப்பெருமாள் அரையர் - வருஷ திருநட்சத்திரம் - வைகாசி – கேட்டை



திருவரங்கப்பெருமாள் அரையர் - அவதாரஸ்தலம்

**தனியன்**

ஸ்ரீராமபதபங்கஜ ஸஞ்சரீகம் ஸ்ரீயாமுநார்ய வரபுத்ரமஹம் குணாப்யம் /
ஸ்ரீரங்கராஜகருணாபரிணாம தத்தம ஸ்ரீபாஷ்யகார சரணம் வரரங்கமீடே //

## வாழித்திருநாமம்

நாதமுனிகுலந்திகழ நன்குதித்தோன் வாழியே
நற்றமிழின் மறைக்கிசையை நவின்றுரைப்போன் வாழியே
காதலரங்கேசரிருகழல் பணிபோன் வாழியே
கானவரநயவிசையால் களிப்பிப்போன் வாழியே
ஏதமில் வண்கச்சியினை ஏத்திசைப்போன் வாழியே
எதிபதியைப் பரிசாகவேற்று வந்தோன் வாழியே
தீதில் யமுனைத்துறைவன் சேவடியோன் வாழியே
திருவரங்கப்பெருமாள் அரையர் திருவடிகள் வாழியே

அவதாரஸ்தலம் - திருவரங்கம்
திருத்தகப்பனார் - ஆளவந்தார்
திருத்தம்பிகள் - தெய்வத்துக்கரசு நம்பி, பிள்ளையரசு நம்பி, சொட்டைநம்பி
சிஷ்யர் - எம்பெருமானார்

## இவர் அருளியுள்ள திருமாலை தனியன்

மற்றொன்றும் வேண்டா மனமே!. மதிளரங்கர்
கற்றினம் மேய்த்த கழலணைக்கீழ் - உற்ற
திருமாலை பாடும் சீர்த்தொண்டரடிப்பொடி யைம்
பெருமானை. எப்பொழுதும் பேசு.

## திருவரங்கப்பெருமாள் அரையருக்கு ஆளவந்தாரின் உபதேசங்கள்

ஆளவந்தார் திருநாடு எழுந்தருளுவதற்கு முன் நோய்வாய்பட்டிருக்கும் பொழுது அவர் சிஷ்யர்களில் முதல்வர்களான திருக்கோஷ்டியூர் நம்பியும் பெரியநம்பியும் திருவரங்கப்பெருமாள் அரையரை முன்னிட்டுக் கொண்டு ஆளவந்தாரை திருவடிகளை வணங்கி தஞ்சமாய்யிருப்பதற்கு ஒரு வார்த்தை அருளிச்செய்ய வேண்டும் என்று வேண்டினர். அதற்கு அவர் `பெரியபெருமாள் திருவடிகளின் கீழே யாழும் கையுமாய் சேவித்து நிற்கும் திருப்பாணவாழ்வாருடைய விக்ரஹத்தை சேவித்து வாருங்கள். பெரியபெருமாளுடைய உயர்நிலையை அறிந்துள்ள திருப்பாணழ்வாரே உபாயமும் உபேயமும்' என்று அருளிச்செய்தார். மேலும் `ஜீவாத்மாவுக்கு பாரதந்த்ரியமே ஸ்வரூபம் என்பதையும், அநந்யார்ஹ சேஷத்தவத்தையும், ஆசார்யாபிமானமே உத்தாரகம்' என்பதையும் விளக்கினார்.

ஆளவந்தார் திருவரங்கப்பெருமாள் அரையரிடம் திருக்கோஷ்டியூர் நம்பியையும், பெரியநம்பியையும் நன்றாக கவனித்துக் கொள்ளும் பொறுப்பை ஒப்படைத்தார். எம்பெருமானாருக்கு பெரியபெருமாள் திருவடிகளிலே ஒடுங்கியிருக்கும் பாண்பெருமாள் விக்ரஹத்தின் ரகசியத்தை தெரிவிக்கும்படி கூறினார். (அந்த விக்ரஹம் இக்காலத்தில் இல்லை). பிறகு அரையர் எம்பெருமானாருக்கு இந்த ரகசிய அர்த்தங்களை ப்ராஸாதித்தருளினார்.

ஆளவந்தார் சரமகைங்கர்யங்கள் அணைத்தையும் சிஷ்யர்கள் துனைகொண்டு இவரே செய்து முடித்தார்.

## இளையாழ்வாரை காஞ்சீபுரத்திலிருந்து திருவரங்கத்திற்கு அழைத்து வருதல்

இளையாழ்வார் ஸந்யாஸாச்ரமத்தை ஏற்றார் என்று கேள்வு உற்று ஸ்ரீஆளவந்தாரின் இறுதி ஆசையை நிறைவேற்ற தெய்வகானம் பாடுவதில் வல்லவரான திருவரங்கப்பெருமாள் அரையரை காஞ்சிபுரத்துக்கு அனுப்பி இளையாழ்வாரை அழைத்து வர பெரியநம்பிகளும் மற்றய சிஷ்யர்களும் சேர்ந்து ஏற்பாடு செய்தார்கள். அதன்படி திருவரங்கப்பெருமாள் அரையர் தேவப்பெருமாளை சென்று சேவித்து தெய்வீக திவ்ய ப்ரபந்தபாடலை பாடி அவரை மயங்க வைத்தார். இந்த தெய்வீக கானத்தை கேட்ட தேவப்பெருமாள் அர்ச்சகமுகேன `உமக்கு என்ன வரம் வேண்டும்' என்று கேட்க அதற்கு திருவரங்கப்பெருமாள் அரையர் `இளையாழ்வாரை எங்களுடன் திருவரங்கம் அழைத்துச் செல்ல அனுமதி கொடுக்கவேண்டும்' என்று கேட்டார். அதற்கு அவர் இசைந்து திருவரங்கப்பெருமாள் அரையருடன் இளையாழ்வாரை அனுப்பி வைத்தார். அதன்படி இளையாழ்வாரை திருவரங்கத்திற்கு அழைத்துவந்து `தர்சன பிரவர்த்தகராக்கி' திருவரங்கம் கோயில் பொறுப்புகள் அனைத்தையும் அவரிடம் ஒப்புவித்தார்.

## நம்பெருமாள் கோயிலுடைய பெருமாளரையர் என்று திருநாமம் சாற்றினார் *

திருவரங்கப்பெருமாளரையர் ப்ரபுத்தராய் காநாதி வித்யைகளிலும் பகவத்ப்ராவண்யத்திலும் மிகுந்தவராய், திருமொழி, திருவாய்மொழித் திருநாள்களிலே அழகிய மணவாளப்பெருமாள் விபவாவதாரத்தில் செய்தருளின அபதாநங்களை நாடகமாத் திருக்கோலமடுக்குச்சாத்தி அபிநயித்து மிகவும் உகப்பிக்க, பெருமாளும் போரவுகந்தருளி `கோயிலுடைய பெருமாளரையர்' என்று திருநாமம் சாற்றி ஸகலவரிசைகளையும் ஸாதித்தருளினார். திருவரங்கப்பெருமாளரையர் தொடக்கமாக அந்த வம்சஸத்தில் அவதரித்தவர்கள் கோயிலுடைய பெருமாளரையர் என்று அழைக்கப்பட்டுவருகிறார்கள்.

## அரையர் பெருமாள் நடையழகுக்கீடாகப் பாடுதல் *

ஒரு காலவிஸேசஷத்திலே, திருவூறல் மஹோத்ஸவத்திலே திருக்காவேரியிலும் நடைக்குப் பரியாயமான தோளுக்கினியான்மேலே புறப்பட்டருளி, அரையரை அழைத்து `நம் நடையழுகுக்கீடாகப் பாடும்' என்று அருளப்பாடுசாதித்தார். அவரும் இசையிலே ஏத்திக்கொண்டு வர கோயிலிலே எழுந்தருளினார்.

*இந்த இருவிருத்தாந்தங்களும் கோயிலொழுகு புத்தகத்தில் குறிபிடப்பட்டுள்ளது.

திருவரங்கப்பெருமாள் அரையர் திருவடிகளே சரணம்.

வாசிக தோஷ: சஷந்தவ்ய: